RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22217

OPEN ACCESS

# சங்க அகநூல்களில் தமிழரின் வழிபாட்டு மரபு

**ச. புனிதா** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா

# The Worship Tradition of the Tamils in the Sangam Akam Scriptures

**S. Punitha** [a, *]

[a] Research Department of Tamil, Holy Cross college (Autonomous), Tiruchirappalli-620002, Tamil Nadu, India

* Corresponding Author: jayarajpunitha@gmail.com

Received: 27.09.2022
Revised: 13-11-2022
Accepted: 15-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The events and rituals that continue from the birth to the death of man are based on faith. Agriculture, food, medicine, music, koothu, astrology, worship, rituals, etc. are all regarded as traditional. From generation to generation, man has accepted what is beneficial from his experiences as customs, traditions, and manners. Their descendants have worshipped the deities with reason. The woman leader fell in love with the one who belonged to the hilly area and had solved the difficulties in the place of preservation of the grains cultivated. Seeing that she was not sleeping without eating, the foster mother mistakenly thought that the woman leader was suffering from some disease and went to the temple and made an offertory to Lord Muruga, slaughtered the goats, and worshipped him. Moreover, efforts have been made to cure their daughter's illness by performing a prayer and by rolling dice. Our soldiers who go to battle have been worshipping Kotravai and praying for their victory. In memory of the dead, they planted a sepulchral stone and worshipped it. They have been worshipping God for the rain. These messages are based on evidence.

**Keywords:** Worship, Kotravai, Traditions, Murugan

## முன்னுரை

கல் தோன்றி மண் தோன்றா முன் தோன்றிய மூத்த குடிகளாகிய நம் தமிழ் குடிகளின் தோற்றம், சரித்திரம், பண்பாடு, வாழ்க்கைமுறை, அரசியல், தொழில்நுட்பம் ஆகியனவற்றை பதிவு செய்வதும், எடுத்துச் செல்வதும் ஏனைய தமிழ் குடிகளினுடன் பகிர்வதுமே நம் நோக்கம். உலகில் தொன்றுதொட்டு வாழக்கூடிய தொன்மையான இனங்களில் ஒன்றான தமிழர் இனத்தை பற்றிய பெருமையை உலகறியச் செய்வதும் நம் நோக்கங்களில் ஒன்றாகும். தமிழ் நாட்டையும், கடல் கடந்தும் ஆட்சிபுரிந்த வீரம் பொருந்திய நம் தமிழ் மன்னர்களின் சரித்திரத்தை விளக்குவதுவும் அவர்கள் புரிந்த சரித்திரப் புகழ்பெற்ற போர்கள் மற்றும் அவர்கள் புரிந்த செயற்கரிய செயல்களை பறைசாற்றுவதுவும் நம் நோக்கங்களில் ஒன்றாகும்.

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என சங்கம் வைத்து செம்மொழியாம் நம் தமிழ் மொழியை வளர்த்த மன்னர்களும், புலவர்களும் ஆன்மீகத்திற்கு ஆற்றிய தொண்டினையும், கட்டிய கோவில்களை பற்றியும் அக்கோவில்களின் வழிபாட்டு மரபுகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மரபு விளக்கம்

"உலக வழக்கினும் செய்யுள் வழக்கினும்

சொற்பொருள் மரபும், முறைமையும் சுட்டுவது

மரபு"

என்று மரபிற்கு நம் முன்னோர் இலக்கணம் வடித்துள்ளனர். "காலங்காலமாக ஒரு குறிப்பிட்ட இனத்தால் பின்பற்றப்பட்ட, ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை முறைகள், ஒடுக்க நியதிகள் மரபு எனப்படும். இதுவே பின்னால் பண்பாடாய்த்; தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும். தேவையான சூழல்களில் எழுதப்படாத சட்டமாய்த் தன்னை முன்னிறுத்தி, தான் சார்ந்த இனத்தை வழி நடத்திச் செல்லும், பண்பாட்டு மரபு, வாழ்வியல் மரபு, வழிபாட்டு மரபு, கலை மரபு என்று தன் விழுதுகளைக் கிளப்பி பரப்பி மக்களை மனித சமூகத்தை வழி நடத்தும் இம்மரபு மக்களின் வாழ்வில் எங்கும் நீக்கமற நிறைந்து காணப்படும்" என்கிறார் முனைவர் ஒ. முத்தையா (Muthaiya, 2012).

## தெய்வங்களை வழிபடுதல்

பண்டைத் தமிழ் மக்கள் ஒன்று கூடி அவரவர்கள் விரும்பிய தெய்வங்களை வணங்கி வந்தனர் என்ற செய்தி

"அழிவுஇல முயலும் ஆர்வ மக்கள்

வழிபடு தெய்வம் கண்கண்டா அங்கு"

இதன் வழி அறியமுடிந்தது (Parimanam & Balasubramaniyam, 2004a).

அழியாச் செயலைச் செய்ய முயலுகின்ற ஆசையுள்ள மக்கள் தாங்கள் வழிபடும் தெய்வமானது தமக்கு உதவுவதற்காகவே வணங்குகின்றனர். மேலும், தம்மைக் காக்கும் என்று எண்ணி வழிபாடு செய்யப்பட்ட தெய்வமே, தம்மை சரணமாக அடைந்தவர்கள் மிகவும் வருந்தும்படி துன்புறுத்தியது என்ற செய்தியும்

"வழிபட்ட தெய்வந்தான் வலி எனச் சாந்தார் கண்

கழியும் நோய் கைம்மிக அணங்காகியது போல"

இதில் காணப்படுகிறது.

## வெற்றிக்காக வேண்டுதல்

வீரர்கள் வெற்றியின் பொருட்டு கொற்றவை என்னும் தெய்வத்தை வணங்கி வந்தனர்.

"மறம் கடை காட்டிய வடிநிலை, சிறந்த

கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே" (Thamizhannal, 2010)

போரிலே வெற்றி பெற்றவர்கள் உடுக்கையடித்து வெற்றியைக் கொண்டாடுவதும், அவ்வெற்றியைத் தந்தக் கொற்றவையின் சிறப்பை எடுத்துப் புகழந்து கொண்டாடுவதும் தமிழர்களின் வழக்கமாக இருந்தது.

## மழைக்கு வேண்டுதல்

இந்திர விழாக் காலத்தில், காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள காவல் பூதத்தைப் பெண்கள் பூசையிட்டு வணங்கியிருக்கிறார்கள். நமது நாட்டிலிருந்து பசி, நோய், பகைகள் ஒழிய வேண்டும், மழையும் செல்வமும் பெருக வேண்டும் என்று வேண்டிக் கொள்வார்கள்.

"காவல் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
புழுக்கலும், நோலையும், விழுக்குடை மடையும்
பூவும், புகையும், பொங்கலும், சொரிந்து
துணங்கையர், குரவையர், அணங்கெழுந்து ஆடிப்
பெருளில மன்னன் இருநில அடங்கலும்
பசியும், பிணியும், பகையும் நீங்கி
வலியும், வானும், தரக்கென வாழ்த்தி,
மாதர் கோலத்து வலவையின் உரைக்கும்
மூதில் பெண்டிர் ஒதையில் தெய்வம்" (Venkatasamy Nattar, 2018)

காவல் பூதத்தின் பலி பீடத்திலே அவரை, துவரை முதலிய சுண்டல்கள், எள்ளுருண்டை, மாமிசம் கலந்த சோறு, மலர், புகை, கள் இவைகளை வைத்துப் படைப்பர். துணங்கைக் கூத்தாடுவர். குரவைக் கூத்தாடுவர்.

மேலும், எம்மைப் பிரிந்த கணவர் கனவிலே வந்து எம்மைத் தொடுகிறார். அவர் எம்மைத் தொட்ட கை நனவிற் போலவே எம்மைவிட்டு நீங்காமல் இருக்க, குளிர்ந்த வையையிலே வரும் நீரை அணிக என்று சிலர் வரம் கேட்கின்றனர். எம் வயிற்றிலே கருவுண்டாக வேண்டும் என்று பொருள்களை வைத்துப் படைக்கின்றனர். பொருள் தேடச் சென்றிருக்கும் எம் காதலர்க்கு நல்ல செல்வம் கைகூட வேண்டும் என்று சிலரும், விபத்திற்குரிய போரிலே எம் காதலர் பகைவரைச் கொன்று வெற்றி பெறுக என்றும் வேண்டுவதாகக் கீழ்வரும் பரிபாடல் பாடல் அமைந்துள்ளது.

"அருவரைச் சேராத், தொடுநர்
கனவில் தொட்டது கைபிழையாது
நனவில் சேரப்ப, நின் நனிபுனல் வையை
வருபுனல் அணிகொள வரங்கொள் போரும்,
கருவயிரு உறுகளனக் கட்ம்படுவோரும்
செய்பொருள் வாய்க்களனச் செவிசார்த்துவோரும்
ஐஅமர் அருகளன அருச்சிப்போரும்" (Parimanam & Balasubramaniyam, 2007)

## படையல்

வேண்டிய தெய்வத்திற்கு உகந்த பொருள்களைப் படைத்து வழிபடுவது பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றுது. காவல் பூதத்திற்குப் படைத்த படையல் பொருள்களாவது. 1. புழுக்கல், 2. விழுக்குடைமடை, 3. பொங்கல், 4. பூவும் புகையும்.

## புழுக்கல்

புழுக்கல் என்பதற்கு முதிரைப் பண்டம் என்று உரைகாரர் விளக்கம் தருகிறார். இதிலிருந்து அக்கால மக்கள் பயறு வகைகளைப் படைத்து வழிபட்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இன்றும் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகளின் போது தட்டைப்பயிறு, பாசிப்பயிறு, மொச்சைப்பயிறு போன்றவற்றை அவித்து, இறைவனை வழிபட்டுள்ளனர். இன்றும் சனீஸ்வரன் கோவிலில் எள்ளுருண்டை, எள் சோறு இவற்றினைப் படைத்து வழிபட்டு வரும் வழக்கம் இருந்து வருகின்றது.

### விழுக்குடைமடை

இதற்கு 'மாங்கிசத்துடனே விரவின சேறு' என்றும் 'நிணச்சோறு' என்றும் விளக்கம் தருகிறார் அடியார்க்கு நல்லார். பண்டைத் தமிழர்கள் தாம் வழிபடும் தெய்வத்திற்கு கறியும், சோறும் படைத்து வழிபட்டதை அறிய முடிகிறது. நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகளில் பலி ஏற்கும் தெய்வங்கட்கு ஆடு வெட்டி பலி கொடுத்து வழிபட்ட செய்தி பற்றி முக்கூடற்பள்ளும், வையாபுரி பள்ளும் குறிப்பிடுகின்றன. கறியும், சோறும் படைத்து வழிபடும் வழக்கம் இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

### பொங்கல்

பொங்கல் என்பதற்கு 'கள்ளு' எனப்பொருள் தருகின்றார் உரையாசிரியர். பண்டைத் தமிழர்கள் தெய்வ வழிபாட்டின் போது படையல் பொருட்களுடன் கள்ளையும் சேர்த்து படைத்து வழிபட்டுள்ளர் என்பதை அறியமுடிகிறது. வையாபுரிப்பள்ளு பழனி வட்டாரத்தில் உள்ள நாட்டுப்புற தெய்வங்கட்குப் படையல் பொருட்களுடன் கள்ளையும் சேர்த்து வழிபட்டது பற்றிக் கூறுகின்றது. நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகளின் பொழுது கள்ளைப் படைத்து வழிபடும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது.

### பூவும் புகையும்

பூவும் நறுமணப்புகையும் இன்று வழிபாடுகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இறைவனுக்கு மலர் தூவி வழிபடுவது என்பது தமிழரின் தனித்தன்மை ஆகும். வெண்தாமரை, அலரி, துளசி, நெய்தல், வில்வம், சங்கபுஷ்பம், கோவிதாரம், ஓரிலை, தாமரை இலைகள், தாமரைப்பூ, துளசி, நவமல்லிகை, நந்தியாவட்டை, மந்தாரை முல்லை, சண்பக புன்னாகம். கொன்றை, செந்தாமரை, அல்லி, மல்லிகை, ஜாதி, முல்லை, மரிக்கொழுந்து, கஜகர்ணிகை போன்ற மலர்களால் இறைவனை வழிபடும் வழக்கம் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் பெரு வழக்காக இருந்து வருகிறது.

நறுமணப் புகையும் பண்டைத் தமிழர் வழிபாடுகளில் முக்கிய இடம் பெற்றுள்ளது. சந்தனம் ஏழு பங்கு, சாம்பிராணி ஆறு பங்கு, குங்கியம் ஐந்து பங்கு, குங்குமப்பூ நாலு பங்கு, பச்சைக் கற்பூரம் ஒரு பங்கு என இம்முறைப்படித் திரவியங்களைச் சேர்த்து கொஞ்சம் நெய்யுடன் கூட்டிப் போடும் தூபத்திற்கு சீதாரி தூபம் என்று பெயர். இது சகல தேவர்களையும் வசீகரணம் செய்யும் ஆற்றல் பெற்றது என தமிழர்கள் மொழிந்துள்ளனர்.

### கல் நட்டு வணங்குதல்

இறந்தோரைத் தெய்வங்களாக வணங்கும் வழக்கமும் தமிழர்களிடம் இருந்தது. இது தமிழ் மக்களின் வழிவழி வழக்கமாகும். போரிலே மாண்ட வீரர்களுக்குக் கல்நட்டு வணங்கும் வழக்கம் தமிழர் பண்பாடு என்பதைத் தொல்காப்பயித்தாற்,

"காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்

சீர்த்தகு மரபின் பெரும்படை, வாழ்த்தல்"

என்று குறிப்பிட்டுள்ளார்.

### பலியிட்டு வணங்குதல்

புறநானூற்றிலேயும், கடவுளர்க்குப் புலால் உணவு வைத்துப் பூசை செய்வது வழக்கமாக இருந்திருக்கிறது என்பதை

"வாடாப் பூவின் இமையா நாட்டத்து

நாற்ற உணவி னோரும்" (Avvai Duraisamy Pillai, 1968)

என்கிறது. அதாவது வாடாத கற்பகத்தின் தாரினையும் இமையாத கண்ணிமையும் நாற்றமாகிய உணவையும் உடைய தேவர்கள் பத்துப்பாட்டில் மதுரைக் காஞ்சியில் சிவபெருமானை உள்ளிட்ட எல்லாத் தெய்வங்களும் புலால் உணவையே விரும்பும் தெய்வங்களாக இருந்தனவாகும். இக்கருத்தையே,

"நீலரும் நிலனும், தீயும், வளியும்

மாசும் விசும்போடு ஐந்துடன் இயற்றிய

மழுவாள் நெடியோன் தலைவனாக

மாசுஅற, விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்

வாடாப் பூவின் இமையா நாட்டத்து

நாற்ற உணவின் உருகெழு பெரியோர்"

நீர், நிலம், தீ, காற்று, திக்குகளையுடைய ஆகாயத்துடன் இந்த ஐந்தயையும் ஒன்றாகப் படைத்தவன். மழுவாகிய வாளாயுதத்தை உடையவன். பெரியோன் ஆகிய சிவபெருமானை முதல்வனாகக் கொண்டவர்கள், குற்றமற்று விளங்கும் உருவத்தையுடையவர்கள். ஒளி பொருந்திய வாடாத மலர் மாலையை அணிந்தவர்கள். இமையாக கண்களை உடையவர்கள். நாற்றம் கமழும் புலால் உணவை விரும்புகின்றவர்கள் என்று பொருள்படும்.

மகள் காதல் நோயால் வருந்தியிருக்கிறாள். அதைக் கண்ட தாய் உண்மையை உணராமல் ஏதோ தெய்வக் கோளாறினால் தான் தனது மகளுக்கு நோய் வந்திருக்கிறது என்று நினைக்கிறாள். ஆதலால் தெய்வங்களுக்குப் பூசை போட்டு ஆட்டை அறுத்து பலிகொடுத்து, மகளின் பிணியைக் தணிக்கும் படி வேண்டிக் கொள்வதென்று முடிவுச்செய்தாள். இதனை குறுந்தொகை,

"மறிக்குரல் அறுத்துத், தினைப்பிரப்பு, இரீஇச்

செல்ஆற்றுக் கவலைப் பல இயம் கறங்கத்

தோற்றம் அல்லது, நோய்க்கு மருந்து ஆகா

வேற்று பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்திப்

பேஎய்க் கொளீஇயன் இவள்" (Avvai Duraisamy Pillai, 1957)

என்றும்

"முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல!

சினவல் ஓம்புமதி! வினவுது உடையன்!

பல்வேறு உருவில் சில் அவிழ் மடையொடு

சிறுமதி கொன்று, இவள் நறுநதல் நீவி,

வணங்கினை கொடுத்தி ஆயின், அணங்கிய

விண்தோய் மாமலைச் சிலம்பின்

ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே" (Avvai Duraisamy Pillai, 1957)

என்றும் உணர்த்தியுள்ளது. மேலும் நற்றிணை,

"வெறிஎன உணர்ந்த உள்ளமொடு மறி அறுத்து

அன்னை அயரும் முருகு"

வெறியெடுத்தால் உன் நோய் தீரும் என்று எண்ணி ஆட்டை அறுத்து, அன்னை முருகனை வழிபட்டாலாம் என்கிறது. அகநானூறும்,

“களம் நன்கு இழைத்துக் கண்ணி சூட்சி
வளநகர் சிலம்பப் பாடிப் பலி கொடுத்து
உருவ செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநா”

முருகனுக்குப் பூசைப்போடும் இடத்தை நன்றாகத் தூய்மை செய்வதும், முருகன் படையாகிய வேலுக்கு மலர்மாலை சூட்டுவதும், சிறந்த நகரில் ஆரவாரம் உண்டாகும் படி முருகனைப் புகழ்ந்து பாடுவதும், ஆட்டைப் பலி கொடுப்பதும், நல்ல தினையுடன் இரத்ததத்தையும் கலந்து தூவி முருகனை வழிபடுவதும் வழக்கமாக இருந்துள்ளது. இதனை திருமுருகாற்றுப்படை,

“சிறுதனை மலரொடு விரைகி மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்”

என்றும்,

“மதவலி நிலைஇய மாத்தான் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூய வெள்ளரி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரிஇ”

என்றும் சுட்டுகிறது.

## விரிச்சிக் கேட்டல்

பெருமுது பெண்டிர் ஊரின் புறத்தே சென்று நெல்லையும், நீரையும் மலரையும் தூவித் தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்டலுக்காகக் காத்திருந்ததை முல்லைப்பாட்டு,

“அருங்கடி மூதூர் கருங்கிற்போதி
யாழிசை இனவண்டு ஆர்ப்ப
நாழி கொண்ட நறுவீமுல்லை
அரும்பவில் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப,
நன்னார் நன்மொழிக் கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள”

என்றும், புறநானூறு

“நெல்நீர் எரிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லு நிரம்பா”

என்றும், குழந்தை பிறந்த நிலையில் மகளிர் விரிச்சி கேட்க நின்றதை நற்றிணையும்

“திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப”

விளக்கியுள்ளது.

## கட்டு

கட்டு என்பது சேரியின் முதுபெண் குறி சொல்லுதல். முறத்திலே பிடிநெல்லையிட்டு தெய்வத்திற்கு பிரம்பிட்டு வழிபாடு செய்து குறி கூறுவது என்றும், குறிகூறும் பெண் குறி கேட்போரை முன் அமர்த்தி முறத்திலே பிடிநெல்லை இட்டுத் தெய்வத்தை வழிபட்டு அந்நெல்லினை நன்னான்காகப் பகுத்து எண்ணி, ஒற்றை எண்ணாக வந்தால் நன்மை என்றும் இரட்டை எண்ணாக வந்தால் தீமை நேரும் என்றும் கூறியுள்ளனர்.

"கட்டறி மகடூஉ கடிமுறத்திட்ட

வட்ட நெல்லு மாண்பில பெரிதென

செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீஇக்

கட்டின் கேட்குமாயின்"

முறத்தில் நெல்லையிட்டு எண்ணிப்பார்த்துக் குறிகூறும் சடங்குமுறை பின்னாளிலும் வளர்ச்சி பெற்றிருப்பதைத் திருக்கோவையாரிலும் சிறிய திருமடலிலும் காணமுடிகிறது.

"நெல்லில் தோன்றும் அவன் வடிவே"

## கழங்கு

கழங்கு என்பது கழற்சிக்காய்களைக் குறிக்கும். பெண்புலியின் கண்களைப் போன்று இருக்கும். கழங்கு பார்ப்பது என்பது கழற்காய்களை முருகன் முன் வைத்து அள்ளி எடுத்து கூறும் ஒருவகைக் குறி என்றும், கழற்சிக்காய்களைப் பரப்பி வைத்து எண்ணிச் சொல்லுதல் என்றும் 'அணங்கறி கழங்கு' என்றும் அதாவது தெய்வத்தான் அறியும் கழங்கு என்றும் விளக்கமளிக்கப்படுகிறது. கழங்குக்குறியில் கழங்கு ஒற்றையாக வந்தால் ஒரு பொருளும் இரட்டையாக வந்தால் பிறிதொரு பொருளும் என்று மொழியப்பட்டுள்ளது.

வேலை அழைத்து முற்றத்தில் புதுமணல் பரப்பி கழங்குக் குறி பார்ப்பது வழக்கமாக இருந்திருக்கிறது.

"பொய்ம்மணல் முற்றம் கவின்பெற இயற்றி

மலைவான் கொண்ட சினைஇய வேலன்

கழங்கினான் அறிகுவ தென்றால் நன்றாலம்ம"

என்ற பாடல் வெளிப்படுத்துகிறது.

"ஆகுவது அறியும் முதுவாய் வேல

கூறுக மாதோ நின் கழங்கின் திட்பம்

எம்மனை முந்துரத் தருமோ

தம்மனை உய்க்குமோ யாதவன் குறிப்பே"

## முடிவுரை

'கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என மொழிந்த ஔவையாரின் வரிகளை முன்வைத்து, முன்னோர்கள் காரணக்காரியத்துடன் கோவிலைகளை அமைத்துள்ளனர். நம் வாழ்வில் ஏற்படும் இன்பத்துன்பங்களுக்கு தெய்வங்கள் மட்டுமே வழிகாட்ட முடியும் என்ற அதீத நம்பிக்கையும் தமிழர்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளதால் அத்தெய்வங்களுக்கு ஏற்ற வழிபாட்டு முறைகளைச்

சிறந்த வகையில் கையாண்டுள்ளனர். இச்செய்திகளைச் சங்க அகநூல்களின் வழி அறிந்து கொள்ள முடிந்தது.

## References

Avvai Duraisamy Pillai, (1957) Ainkurunuru Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

Avvai Duraisamy Pillai, S. (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Balasubramaniyan, P. (1999) Tamilar Thiruvilakalum Panpadum, Ramkumar Pathippagam, Palani, India.

Muthaiya, O. (2012) Marabum Marabu Sarnthum, Kavya Pathippagam, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2007) Paripadal, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004a) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Sidhamparanaar, S. (2010) Pazhantamilar Vazhvum Valarchiyum, Sri Senbaga Pathippagam, Chennai, India.

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

Venkatasamy Nattar, N.M. (2018) Silapathikaram Moolamum Uraiyum, 1st Edition, Gowra Agency, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License